Registered as a Newspaper

பக்கங்கள் - 12

விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 236

வெள்ளிக்கிழமை
19 ஜூலை 2024

ஆடி
வள்ளுவ






## யாழ். மாவட்டத்தில்
# 350 கிராமங்களில் அபிவிருத்திப் பணி

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 350 கிராமங்கள் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

11



## ஞானசாரருக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 19

நான்கு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த கலகொட அத்தே ஞானசார தேரர் மேன்

11



## குதிரையில் ரணில்?

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராகக் களமிறங்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க, பொதுச் சின்னமாக குதிரைச் சின்னத்தைத் தேர்ந்

11

## பெரமுன ஆதரிப்பின் பிரதமராகப் பஸில்!

### ரணிலின் 'டீல்' இதுவே ஐ.ம.சக்தி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவளித்தால் பஸில் ராஜபக்சவை பிரதமராக்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவிடம் உறுதியளித்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார தெரிவித்தார்.

11

## ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடக்குமாம்!

### அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 19

எக்காரணம் கொண்டும் ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப் படமாட்டாது. அது நிச்சயம் நடக்கும். தேர்தலுக்குப் பிறகே அரசமைப்பு மறுசீரமைப்பு இடம்

11

## தேர்தல் முடிவடையும் வரை 22இனை தாமதிக்கத் திட்டம்

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும்வரை அரசமைப்பின் 22ஆவது திருத்தச்சட்ட வரைவை வர்த்தமானியில் வெளியிட வேண்டாம் என நீதி அமைச்சர் விஜயதாஸ

11

## சஜித்துடன் இனி அரசியல் இல்லை

### பொன்சேகா அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 19

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துடன் இனி அரசியல் பயணம் செய்யப்போவதில்லை. அவர் பயணிக்கும் அரசியல் வழி தவறானது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து என்னை சட்ட ரீதியாக நீக்க

11

## முட்கிளுவை குத்தி மூதாட்டி உயிரிழப்பு

### கிருமித்தொற்றே காரணம் உடற்கூற்று அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

விறகு பொறுக்குவதற்காகச் சென்றபோது, முட்கிளுவை குத்தியதால் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - காரைநகர், களபூமியைச் சேர்ந்த வனிதேற்கரசி பாலசுப்பிரமணியம் (வயது - 73)

11

### நயினாதீவு விகாரையில்
## கடத்தப்பட்டார் புத்தர் கைதானார் இளைஞர்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம் - நயினாதீவில் உள்ள பழைய விகாரையில் இருந்து புத்தர் சிலையை திருடிய குற்றச்சாட்டில்

11

## விஷஜந்துக் கடியுடன் சென்றவருக்கு சிகிச்சை வழங்க எவரும் இல்லை!

### சாவகச்சேரி மருத்துவமனையில் மீண்டும் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில், நேற்றுமுன்தினம் இரவு மருத்துவத்துக்காகச் சென்றபோது, அங்கு மருத்துவர்களோ தாதியர்களோ இருக்கவில்லை என்று பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

திருநீலகண்டன் எனப்படும் பெரியளவிலான மட்டத்தேளின் (விஷஜந்துவின்) கடிக்கு உள்ளான தனது தந்தையை சாவகச்சேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும், இதன்போது அங்கு மருத்துவர்களோ அல்லது தாதியர்களோ இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் செல்லவேண்டி ஏற்பட்டதாகவும் நபரொருவர் முறையிட்டுள்ளார்.

11

## மக்களுக்காகவே செயற்பட்டேன் மாபியாக்களுக்கு பிடிக்கவில்லை

### மருத்துவர் அர்ச்சுனா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 19

மக்களுக்கு உண்மையாகச் செயற்பட்டேன். மாபியாக்களுக்கு அது பிடிக்கவில்லை. அதனால் என்னைத் தற்போது விரட்டியுள்ளனர் என்று சாவகச்சேரி மருத்துவமனையின் முன்னாள் பதில் பணிப்பாளர் மருத்துவர் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் மக்களின் பிரச்சினைகளைப் பேசினேன். மக்களுக்காகச் செயற்பட்டேன். ஆனால், மாபியாக்களுக்கு அது பிடிக்கவில்லை. இதனால் என்னை இந்த மண்ணிலிருந்து வெளியேற்றியுள்ளனர். மக்களின் அன்பு என்பது எனது இதயத்துடிப்பு. எனினும், கடமை நிமித்தம்

11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு சுகாதாரத்துறையில் ஆளணி வளத்தை நிரப்புங்கள்

## சுகாதார அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 19

**வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி சிறந்த சேவைகளை முன்னெடுத்துவரும் வடக்கு மாகாண சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்கு ஆளணிப் பற்றாக்குறைக்கான தீர்வுகள் வழங்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வேண்டுகோள் விடுத்துளார்.**

சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரன தலைமையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனை வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார மற்றும் கல்வித் துறைகளே நாட்டில் மிகவும் சிக்கல் வாய்ந்தவைகளாகக் காணப்படுகின்றன. இந்த இரண்டு துறைகளிலும் அர்ப்பணிப்பு மிக அவசியம்.

மாகாணத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்குப் பல சவால்கள் காணப்படுகின்றன. வளப்பற்றாக்குறை காணப்படுவதுடன், எங்கள் மீதான குற்றச்சாட்டுகளும் காணப்படுகின்றன.

வடக்கு மாகாண சுகாதாரத்துறையில் பல விடயங்களை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தியே சிறந்த சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நோய்த் தடுப்புக்களை மேற்கொள்வதுடன் நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் - என்றார்.

இதன்போது சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன,

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் காணப்படும் மருத்துவமனைகளின் குறைபாடுகள் தொடர்பில் அறிந்துள்ளோம். குறித்த மருத்துவமனைகள் தொடர்பான முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு இந்தியத் தூதரகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் விரைவில் தீர்வுகள் பெற்றுத் தரப்படும்- என்றார். (ச-26,27)

---



# ஐ.ம.சக்தி தவிசாளராக இம்தியாஸ்?

கொழும்பு, ஜூலை 19

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஸ்தாபகர்களில் ஒருவரும், கட்சியின் யாப்பு உருவாக்குநர்களில் ஒருவரும், சிரேஷ்ட உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை நியமிக்க சஜித் பிரேமதாஸ தீர்மானித்துள்ளார்.

இந்தப் பதவியை ஏற்று எதிர்வரும் தேர்தலுக்குத் தயாராக வேண்டும் என்றும் இம்தியாஸிடம் சஜித் பிரேமதாஸ கூறிய தாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் ஒருசிலர் தவிசாளர் பதவிக்கு வேறு சிலரின் பெயர்களை முன்மொழிந்து வருவதாகத் தெரிகிறது.

எனினும் இம்தியாஸ் போன்ற ஒருவரை தவிசாளராக நியமிப்பதன் மூலம், சிவில் சமூகத்தினது ஆதரவையும் வெகுஜன ஆதரவையும் ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் திருப்பலாம் என கருதப்படுகிறது. (ச-இ)

---

## ரணிலுக்கு ஆதரவு

# களமிறங்கும் பட்டாளம்

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராகக் களமிறக்கி அவருக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்க ஸ்தாபிக்கப்பட்ட புதிய அரசியல் கூட்டணி கதிரைச் சின்னத்தின் கீழ் தேர்தல்களில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

இதனை அந்தக் கூட்டணியின் செயற்பாட்டாளர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நிமால் லான்சா ஆகியோர் தெரிவித்தனர்.

இந்தப் பொதுக் கூட்டணியில் 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது பிரதான செயற்பாட்டாளர்களாக உள்ளனர். அதனைவிட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளிலிருந்து பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இணையவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமால் லான்சா, துமிந்த திஸாநாயக்க, அநுர பிரியதர்ஷன யாப்பா, அமைச்சர்களான சுசில் பிரேம ஜயந்த, நிமால் சிறிபால டி சில்வா, நளின் பெர்னாண்டோ உள்ளிட்டோரும் அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகிய மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண, வீரகுமார திஸாநாயக்க உள்ளிட்டோர் இந்தப் புதிய கூட்டணியுடன் கைகோர்த்துள்ளனர்.

இந்தக் கூட்டணி உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராகக் களமிறக்கி, அவருக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கவுள்ளது. இந்தப் பொதுக் கூட்டணியின் பெயர் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

---

# மறியலில் உள்ளவர்களுக்கும் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம்



## உயர்நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, ஜூலை 19

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்க தேர்தலில் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்று கோரி உயர்நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இது தொடர்பான வழிகாட்டுதல்களைவழங்க தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

அரசமைப்பின் கீழ் நபர் ஒருவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் வரையில் நிரபராதி என்ற அடிப்படையில் அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அனைத்து அடிப்படை உரிமைகளை அனுபவிக்க அவருக்கு உரிமை உண்டு என்று மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

---

# கருணாவுடன் ஐ.தே.க.சந்திப்பு

கொழும்பு, ஜூலை 19

கருணா அம்மான் தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கும் ஐ.தே.கட்சி உறுப்பினர் அகிலவிராஜ்காரியவசம் தலைமையிலான குழுவினருக்கும் இடையே கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பல்வேறு திட்டங்கள் தொடர்பாக விரிவாகவும், சிறப்பான முடிவுகளுடன் ஆராயப்பட்டுப் பேசப்பட்டதாக கூறப்படுகிறது. (ச-இ)

---

# மனுவை மீளப்பெற்ற டயானா!

கொழும்பு , ஜூலை 19

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியலிலிருந்து தன்னை நீக்கியமை தவறு என முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்றுமுன்தினம் புதன்கிழமைவிசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது டயானா கமகே யின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகி மேற்படி மனுவை மீளப்பெற்றுக்கொள்வதாக அறிவித்தனர். (எ-22,6)

---



# இடியப்பச் சிக்கலை உருவாக்குகிறது அரசு

## பீரிஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதியின் பதவிக் காலம் மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் குறித்து அரசமைப்பின் 83(ஆ) உறுப்புரையில் காணப்படும் முரணை திருத்தம் செய்வதாகக் குறிப்பிட்டு அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் கொண்டுவர உத்தேசித்துள்ளமை யானது இல்லாத சிக்கல்களை அரசாங்கம் தோற்றுவிக்கும் செயற்பாடே. -இவ்வாறு சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும். ஒருவேளை திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் 30 நாள்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல நேரிடும். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படவுள்ள நிலையில் தேர்தலுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் அரசு செயற்படுவது முற்றிலும் வெறுக்கத்தக்கது- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவரித் திணைக்களத்தால் அரசுக்கு வருமானம் இழப்பு!

*கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூலை 19**

**வற் வரி தொடர்பான வருவாயில் சுமார் 20 சதவீதத்தை வசூலிக்க முடியாத அபாய நிலைமை உள்ளது என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வினைத் திறனற்ற மற்றும் பொறுப்பற்ற செயற்பாடுகளால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தால் வசூலிக்கப்படவேண்டிய ஆனால் இதுவரை அறவிடப்படாத வற் வரி தொடர்பான கணக்காய்வு அறிக்கையிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தனது கடமைகளை உரிய நேரத்தில் அதிகபட்ச வினைத்திறனுடன் நிறைவேற்றத் தவறியமையே அரசாங்கத்துக்கு வரி வருமான இழப்பு ஏற்படுவதற்குப் பிரதான காரணம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோசடியாக கவனக்குறைவாக அல்லது வேண்டுமென்றே வசூலிக்கப்படும் நிலுவைத் தொகை மற்றும் அபராதங்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் தொடர்பில் நிறுவன அளவில் விசாரணை நடத்தப்பட்டு உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மஹிந்த 978, சிறிசேன 557 ஹெலிகொப்டர் பயணங்கள்!

கொழும்பு , ஜூலை 19

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்சவும் மைத்திரிபால சிறிசேனவும் தமது பதவிக்காலத்தில் அளவுக்கதிகமாக ஹெலிகொப்டர் பயணங்களை பயன்படுத்தியுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 2005-2015 காலப்பகுதியில் 978 தடவைகள் ஹெலிகொப்டர் பயணங்களை மேற்கொண்டார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஐந்து வருட பதவிக்காலத்தில் 557 தடவைகள் ஹெலிகொப்டர்களை பயன்படுத்தினார். மஹிந்த ராஜபக்ச சராசரியாக வருடத்துக்கு 88 பயணங்களை மேற்கொண்டுள்ள நிலையில் மைத்திரி 111 பயணங்களை மேற்கொண்டுள்ளார். (ச-22-6)

## மோசடி வர்த்தகம் வலைவீச்சு துரிதம்

கொழும்பு, ஜூலை 19

எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரம் போன்றவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் நுகர்வோருக்கு சலுகைகளை வழங்காத வர்த்தகர்களை கண்டுபிடிக்க நுகர்வோர் அதிகாரசபை களத்தில் இறங்கியுள்ளது.

எதிர்வரும் நாள்களில் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் இடம்பெறவுள்ளன என்று அதிகாரசபையின் தலைவர் துசித இந்திரஜித் உடுவர தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## திரையரங்கில் கைபேசி தடுப்பதற்கு புதிய சட்டம்

*திரைப்பட இயக்குநர்கள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, ஜூலை 19



திரையரங்குகளுக்குள் கைபேசிகளைக் கொண்டு செல்வது தொடர்பாக புதிய சட்டம் ஒன்றை இயற்றவேண்டும் என்று திரைப்பட இயக்குநர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. திரையரங்குகளுக்குள் கைபேசிகளைக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்குப் புதிய சட்டம் ஒன்று இயற்றப்படவேண்டும் என்றும், திரைப்படக் கூட்டுத்தாபனம் இது தொடர்பில் தலையிட்டு சட்ட ஏற்பாடுகளைத் தயாரிக்க வேண்டும் என்றும் திரைப்பட இயக்குநர்கள் சங்கம் கோரியுள்ளது. கடந்த காலங்களில் கைபேசிகளைத் திரையரங்குகளுக்குள் கொண்டு செல்வதால் ஏற்பட்ட சில சம்பவங்களை அடுத்தே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது என்றும் திரைப்பட இயக்குநர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

## வெளியேறிய மருத்துவர்கள் திரட்டப்படும் விவரங்கள்

கொழும்பு , ஜூலை 19

கோபா குழுத்தலைவர் மேஜர் பிரதீப் உந்துகொட சுகாதார அமைச்சிடம் வெளிநாடு சென்ற மருத்துவர்களின் விவரங்கள் தொடர்பான கோரிக்கையை விடுத்துள்ளார். மேலும் வெளிநாடு சென்ற மருத்துவர்களின் பிணைப்பணங்களை அறவிடுமாறும் கோபா குழு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (22-6)

## பாகிஸ்தான் நாட்டுக்கு இலங்கை கண் தானம்

கொழும்பு, ஜூலை 19

இலங்கை இருபத்தாறாயிரத்து215 கண்களை பாகிஸ்தானுக்கு அன்பளிப்புச்செய்துள்ளது.

ஜனாதிபதி நிதிய நிதியுதவியுடன் இலங்கைத் தூதுவர் ரவி விஜேதுங்க, ராவல்பிண்டி இராணுவ கண் மருத்துவமனையில் இம்மாதம் 12ம் திகதி இந்தக் கண்களை அன்பளிப்புச்செய்துள்ளார். பாகிஸ்தானில் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கையின் போது கண்களை இழந்த இராணுவத்தினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இந்தக் கண்கள் பொருத்தப்படவுள்ளன.

மேற்படி அன்பளிப்பு வைபவத்தில் உரையாற்றிய இலங்கைத் தூதுவர் புலிகளுக்கு எதிரான போரின்போது பாகிஸ்தான் நிபந்தனையற்ற இராணுவத்தளவாடங்களையும் பயிற்சிகளையும் இலங்கை இராணுவத்துக்கு வழங்கியமைக்கு அவர் நன்றி தெரிவித்தார். (ச-22-6)

## படிநினம் தெரியுமோ?

**கொ**ஞ்சநாளா சாவகச்சேரி ஆஸ்பத்திரியைப் பற்றி எல்லாரையும் கதைக்க வைச்ச டாக்குத்தர் அர்ச்சுனா நேற்றையோட மூடை முடிச்சைக் கட்டிக்கொண்டு வெளிக்கிட்டுட்டார். 'அர்ச்சுனா எப்ப போவார், ஆஸ்பத்திரி எப்ப காலியாகும்?' எண்டு பார்த்துக்கொண்டிருந்தவை இனிமேல் 'வழமைபோல'டியூட்டி பாக்கப் போகினம் எண்டதுக்கு முந்தநாள் இரவு நடந்த விசயம் நல்ல உதாரணம்.


மட்டத்தேளில கனக்க வகையிருக்கு. அதில திருநீலகண்டன் பொல்லாதது. பார்க்கவே பயமா இருக்கும். அதின்ர உடம்பின்ர ரண்டு கரையிலையும் நீலக்கோடு போட்டமாதிரி டிசைன் இருக்கும். அதோட விசத்தன்மை கூடினது. நீலக்கோடு இருக்கிறதாலையும், விசத்தன்மை கூடினது எண்டதாலையும் தான் திருநீலகண்டன் எண்டு எங்கட ஆக்கள் அதைச் சொல்லுறவை. (அமுதம் எடுக்கேக்க வந்த விசத்தை சாப்பிட்ட, பிறகு பார்வதி அதை உள்ளுக்க போகவிடாமல் தொண்டையை அமத்திப் பிடிக்க, அது தொண்டையிலையே நிண்டு அது நீலமாகிப் போனதால திருநீலகண்டன் எண்டு சிவபெருமானைச் சொல்லுறவை) அப்பிடிப்பட்ட திருநீலகண்டன் முந்தநாள் இரவு ஒருத்தருக்கு கடிச்சிருக்குது. உடனேயே அவரை ஏத்திக்கொண்டு அவரின்ர மகன் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஓடிப்போயிருக்கிறார். ஆனால் சினிமாப் படங்களில வாற பேய்மாளிகை மாதிரி கட்டம் மட்டுமிருக்கு, ஆக்களைக் காணேலை. டாக்குத்தரோ, நேர்ஸ்மாரோ ஒருத்தரும் இல்லை. சரி, காவலாளியாவது இருப்பார்தானே எண்டு, அவர் இருக்கிற அறையை எட்டிப் பார்த்தால் அங்கையும் ஒருத்தருமில்லையாம். எவ்வளவு நேரம்தான் ஆளில்லா ஆஸ்பத்திரியில மட்டத்தேள் கடிச்ச வலியோட நிக்கமுடியும்? உடனேயே யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு வந்து, அங்க ஆளை அட்மிட் பண்ணினவை.

ஒருவேளை ஏதும் பாம்பு கடிச்சு ஆரையும் கொண்டந்தாலும் இப்பிடித்தானே சாவகச்சேரி ஆஸ்பத்திரி ஆளில்லாமல் ஆவியள் இருக்கிற மாளிகை மாதிரி இருக்கும்? மட்டத்தேள் கடிச்சால் உயிர்போக சான்ஸ் இல்லையெண்டதால முந்தநாள் போனவை தப்பிச்சினம். முதல் சொன்னமாதிரி பாம்புக்கடிவாங்கிபோயிருந்தால், டாக்குத்தரைத் தேடித்திரிஞ்சேநுரை கக்கி அதிலே ஆள் முடியவேண்டியதுதான். டாக்குத்தர் அர்ச்சுனா உந்தக் கேடுகெட்ட விசயங்களுக்கு எதிராத்தானே போராடினவர்? இனியாவது உப்பிடியான வேலையளை விட்டிட்டு, மனச்சாட்சிப்படி மக்களுக்குச் சேவை செய்து 'அர்ச்சுனா மட்டுமில்லை நாங்களும் ஆஸ்பத்திரியிலையும், சனத்திலையும் அக்கறை உள்ள டாக்குத்தர்மார்தான்' எண்டு காட்டவெல்லோ வேணும். அதை விட்டிட்டு, அர்ச்சுனா இல்லையெண்டவுடனேயே 'பழைய குருடி கதவைத் திறவடி' எண்ட கணக்கா, ஆஸ்பத்திரியையும் சனத்தையும் அம்போ எண்டு விட்டுட்டு போறது நியாயமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயலிசைப் புலவர்கள் யாழில் ஆராதனை விழா!

யாழ்ப்பாணம், ஜுலை 19

இயலிசைப்புலவர்கள் ஆராதனை விழா யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

குரலோசை நுண்கலைகளின் தாயகம் அமைப்பின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஈழத்தின் தமிழிசைப் பாடல்களை உருவாக்கிய இயலிசைப்புலவர்கள் 27 பேரின் பாடல்கள் ஆராதனை நிகழ்வாக ஆற்றுகை செய்யப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தின் முன்னணி இசைக் கலைஞர்கள் 25 க்கும் அதிகமானோர் பங்கேற்கும் இந்த ஆராதனை நிகழ்வில் 35 க்கும் அதிகமான ஈழத்தின் தமிழிசைப் பாடல்கள் ஆற்றுகைப்படுத்தப்படவுள்ளன. (ச-100)

பல மைல் கடந்து

## தூக்குக்காவடி எடுத்த பக்தர்

யாழ்ப்பாணம், ஜுலை 19

சுழிபுரம், பெரியபுலோ அரசடி ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது அடியவர் ஒருவர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து தூக்குக்காவடி எடுத்து, 130 கிலோமீற்றர்கள் தூரம் தாண்டி வந்து தனது நேர்த்திக் கடனை நிறைவேற்றியுள்ளார்.

ஆலயத்தின் திருவிழாவானது கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமாகி, தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-125,27)

## தமிழ்மொழி விழா

கிளிநொச்சி, ஜுலை 19

கரைச்சிக் கோட்ட தமிழ்மொழி விழா, கரைச்சிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் தலைமையில் கனகபுரம் மகா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-13)

## சீட்டிழுப்பு திகதி மாற்றம்

மன்னார், ஜுலை 19

மன்னார் மாவட்ட கூட்டுறவுச்சபையின் கட்டட அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு கடந்த 6 ஆம் திகதி தவிர்க்க முடியாத சில காரணத்தால் குலுக்க முடியாமற் போயுள்ளது.

இந்தச் சிட்டிழுப்பானது மன்னார் பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி மாலை 5 மணிக்கு குலுக்கப்படும் என கூட்டுறவுச் சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ப)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 19

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம், கல்லூரி முதல்வர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் கல்லூரி நூலக மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-63)

## பனை வெல்லம் உற்பத்தி உயர்வு

யாழ்ப்பாணம், ஜுலை 19

யாழ்.குடாநாட்டில் பனை வெல்லத்தின் உற்பத்தி, இந்த ஆண்டில் அதிகரித்திருப்பதோடு அவற்றின் விற்பனையும் உயர்ந்துள்ளதாக பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் இந்த பனை வெல்லத்தின் சந்தை வாய்ப்பு கடந்த காலங்களை விட இம்முறை அதிகரித்துள்ளது.

இந்தப் பனை வெல்லம் உள்ளூர் மற்றும் வெளியூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-17)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜுலை 19

'சமூக ஊடகங்களின் வகிபாகத்தில் எழும் கேள்விகள்' என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல், கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் வேலும்மயிலும் சேந்தன், இலங்கை திறந்த பல்கலைக்கழக வெகுஜன ஊடகம் மற்றும் தொடர்பாடல் கற்கைத் துறையின் வருகைதரு விரிவுரையாளர் கனகநாயகம் வேல்தஞ்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்புவிடுக்கின்றனர். (ப-66)



பளை பிரதேச ஆடிப்பிறப்பு விழா, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மல்வில் கிருஷ்ணன் ஆலய பொது மண்டபத்தில் பளை பிரதேச செயலர் ஜெயசீலனின் பங்குபற்றுதலுடன் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. (ப-125)

## அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஜுலை 19

'ரில்கோ ப்ளூ ஓசனின்' அடிக்கல் நடுகை விழா, இல.107, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓல்ட் பார்க் முன்பாக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மு.ப. 10 மணி வரை இடம்பெறவுள்ளது. (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும், பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். முயற்சி சாதகமாக முடியும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு குறையும்.

**மிதுனம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கக்கூடும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சக வியாபாரிகளால் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். காரியங்களை வெற்றிகரமாக முடித்துவிட முடியும்.

**கன்னி:** சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும். விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவு களும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்பு தருவார். பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.

**விருச்சிகம் :** தெய்வ அனுகிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும். உடல் ஆரோக்கியத் தில் கவனம் தேவை. விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு தாய்வழி உறவினர் களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். நண்பர் களால் ஆதாயம் கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும். தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நலம் சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சுமையைக் குறைக்க என்ன வழி?


ஜனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க தொழிற் சங்கப் போராட்டங்கள் இன்னமும் சூடுபிடிக்கும். பணிப்புறக்கணிப்புகள் தாராளமாக இடம்பெறும். அவற்றின் பின்னால் அரசியலும் இருக்கும். ஆனால் அதற்காக அரசியலால்தான் அவை நடக்கின்றன என்றும் சொல்லமுடியாது.

பொருளாதார நெருக்கடியின் பின்னர் வாழ்க்கைச் சுமை அதிகரித்துவிட்டது. 'நாடு பொருளாதாரத்தில் மீண்டு வருகின்றது, வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரிக்கின்றது, வங்குரோத்திலிருந்து நாடு மீண்டுவிட்டது, கடன்மறுசீரமைப்பு வெற்றிகரமாக நிறைவேறிவிட்டது' எனத் திரும்பத் திரும்ப அரசாங்கம் சொன்னாலும், நாட்டில் மக்களின் நிலையோ படுமோசமாகத்தான் இருக்கின்றது. உழைப்பது வாழ்வதற்குப் போதாது என்ற நிலைதான் இன்றும் தொடர்கின்றது.

எரிபொருள், மின்சாரம் இரண்டும் அனைத்து பொருட்கள், சேவைகள் மீதும் தாக்கத்தை செலுத்தக் கூடியன. ஜனாதிபதித் தேர்தலை நாடு எதிர்கொள்ளவுள்ள நிலையில் அவற்றின் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதன் விமோசனத்தை நாட்டு மக்கள் அனுபவிக்கவில்லை. கட்டணக் குறைப்பால் ஏற்பட்ட நேரடி நன்மைகளை மாத்திரம்தான் மக்கள் அனுபவிக்க முடியும். இவை இரண்டினதும் அதிகரிப்புடன் ஏக காலத்தில் பொருட்கள், சேவைகளின் விலைகளை உயர்த்திய தரப்புகள், அவற்றின் விலைக்குறைப்புடன் பொருட்கள், சேவைகளின் விலைகளைக் குறைக்கவில்லை என்பது பெரும்துயரம். இதை அமைச்சர் காஞ்சன விஜயசேகர கூட சுட்டிக்காட்டியிருந்தார். இவை மட்டுமல்ல, டொலர் அதிகரிப்பால் உயர்த்தப்பட்ட பொருட்களின் விலைகள்கூட டொலரின் பெறுமதியில் தளர்வு ஏற்பட்டும் விலை குறைக்கப்படவில்லை. வாயில் வந்ததே விலை என வர்த்தகர்கள் பொருட்களை விற்கின்றனர்.

இத்தகைய பொருளாதாரச் சுமையை எதிர்கொள்ள முடியாத நடுத்தர வர்க்க மக்கள் புலம்பெயர்தலை தமது முதன்மைத் தெரிவாக எடுத்துக்கொண்டுள்ளனர். மறுபுறம் இலங்கையின் அரசாங்கப் பணிகளில் இருக்கும் நடுத்தர வர்க்கத்தினர் சம்பள அதிகரிப்பை தங்கள் போராட்டக் கோஷமாக எடுத்துக்கொண்டுள்ளனர். வாழ்க்கையைக் கொண்டு நடத்த சம்பளத்தை அதிகரிக்குமாறு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரிவருகின்றனர். அண்மைய நாள்களில் நடந்த அனைத்துத் தொழிற்சங்கப் போராட்டங்களிலும் பொதுவாக இழையோடியிருந்த விடயம் சம்பள அதிகரிப்புத்தான். இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 7 சதவீதத்தினரே அரசாங்கத்தில் பணிபுரிகின்றனர். இவர்களின் போராட்டங்களால் ஏனைய மக்களும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர். இந்த 7 சதவீதத்தினருக்கான சம்பள உயர்வாலும் ஏனைய 93 சதவீத மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதுதான் நிச்சயம்.

தற்போதைய சூழலில் அரசாங்கப் பணியாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்தக் கூடியளவுக்கு இலங்கையின் நிதி நிலைமை இல்லை. அரசாங்கப் பணியாளர்களின் சம்பளத்தை உயர்த்தினால் அதை ஈடு செய்வதற்கு வரியை அரசாங்கம் உயர்த்தும். வரி உயர்வால் பாதிக்கப்படப்போவது ஒட்டுமொத்த நாட்டு மக்களும்தான். எனவே தற்போதைய சூழலில் பொருட்களின் விலைகளைக் குறைப்பதும், சேவைகளின் கட்டணங்களைக் குறைப்பதும்தான் மக்களின் சுமைகளை இல்லாதாக்கக்கூடிய ஒரே வழியாக இருக்க முடியும். அதேவேளை அரசாங்கத்தால் சில பொருட்கள், சேவைகளின் விலைகள் மற்றும் கட்டணங்கள் குறைக்கப்பட்டாலும் அதை நாட்டு மக்கள் அனுபவிக்க முடியாத வகையில் இருக்கும் 'சிஸ்டத்தை' மாற்றியமைக்குமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்பதன் மூலமே பொருளாதாரச் சுமையை ஓரளவுக்கேனும் தாங்கக் கூடிய சூழல் உருவாகும். எனவே தொழிற்சங்கங்கள் தங்கள் போராட்டங்களின் போது இதைக் கவனத்தில் கொள்வது ஒட்டுமொத்த நாட்டுக்கும் நன்மைபயக்கும்.




## வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு ஜனாதிபதியால் குழு நியமிப்பு



**கொழும்பு, ஜூலை 19**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பிரத்தியேகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட குழுவொன்றை நியமிப்பதற்கும், அந்த சகல பாதுகாப்பு பணிகளையும் ஒருங்கிணைக்க பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கவும் பரிந்துரைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைப் பேரணியில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தாக்கப்பட்டார்.

அதனையடுத்தே இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரத்தியேகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் இந்தப் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் இந்தக் குழுவை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது. (ச-100)

## கடவுச்சீட்டுப் பெற புதிய முறைமை

கொழும்பு, ஜூலை 19

கடவுச்சீட்டு வழங்கும் புதிய முறைமையொன்று இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. விண்ணப்பதாரர்களின் நலனுக்காகவும் செயல்முறையை சீரமைக்கவும் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கான புதிய வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய கடவுச்சீட்டுகளுக்கு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பதற்கு www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக முன்கூட்டியே பதிவு செய்யவேண்டும்.

ஒன்லைனில் பதிவு செய்ததன் பின்னர் முன்னுரிமை முறையின்படி கடவுச்சீட்டுகள் வழங்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)


## 2ஆம் கட்ட 'அஸ்வெசும' விண்ணப்பங்கள் பரிசீலனை

கொழும்பு, ஜூலை 19

'அஸ்வெசும' இரண்டாம் கட்ட விண்ணப்பங்களின் பரிசீலனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று 'அஸ்வெசும' நலன் புரிச்சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார். 'அஸ்வெசும' விண்ணப்பங் களை ஏற்கும் காலம் கடந்த 13ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இரண்டாம் கட்டமாக 75 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நீர்க்கட்டணம் குறைகின்றது

மின்சாரக் கட்டணத் திருத்தத்தை அடுத்து, நீர்க் கட்டணங்களும் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நீர்க்கட்டண குறைப்புத் தொகை குறித்த முடிவு இந்த வார இறுதிக்குள் அறிவிக்கப்படும் என்று நீர் வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். நீர் வழங்கல் சபை 6.2 பில்லியன் ரூபா இலாபமாக ஈட்டுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## மருந்துக் கொள்வனவு நிலுவை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 19

சுகாதார அமைச்சால் மருந்து விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை 800 மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளுக்கே நிலுவை செலுத்தப்படவுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. (ச-இ)

**நாளை**

20.07.2024

சனிக்கிழமை - ஆடி - 04

சுபநேரம் : 03.01 - 04.31

ராகுகாலம் : 09.01 - 10.31

**நாளொரு நல்வார்த்தை**

நூறு அறிவாளிகளுடன் மோதுவதைவிட ஒரு மூடனோடு மோதுவது மிகச் சிரமமானது

- ஈ.வெ.இராமசாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டமளிப்பும் சைவமாநாடும்

யாழ்ப்பாணம். ஜூலை 19
அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில், 61 ஆவது சைவப்புலவர் பட்டமளிப்புவிழாவும் சைவமாநாடும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் தலைமையில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. முதலாவது அமர்வு காலை 8.30 மணிக்கும் இரண்டாவது அமர்வு நண்பகல் 12 மணிக்கும், மூன்றாவது அமர்வு பி.ப. 1.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திருமுன்னிலை வகிக்கவுள்ளார்.

ஆரம்ப அமர்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன், சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலிக் கந்தசுவாமி ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ. இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள், வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ.சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள், யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன், கௌரவ விருந்தினராக பௌராணிகர் க.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது மாநாட்டுச் சிறப்புரை, சைவாகமபூஷணம் பட்டம் வழங்கல், சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பட்டமளிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

இரண்டாவது அமர்வு சைவப்புலவர் வ. தயாபரசிவம்தலைமையில் இடம்பெறவுள்ளது. இதன்போது 'சைவநாதம் மலர்' வெளியீடு இடம்பெறும்.

சைவப்புலவர்.சிவானந்தஜோதி ஞானசூரியம் தலைமையில் நடைபெறவுள்ள மூன்றாவது அமர்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர்.ஜெயலட்சுமி இராசநாயகம் கலந்து கொள்வார். இதன்போது செய்யுள் இலக்கண நூல் வெளியீடு, கௌரவிப்பு மற்றும் பண்ணிசைக் கச்சேரி நிகழ்வுகள் நடைபெறுமென அகில இலங்கை சைவப்புலவர் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-25, 66)

## கிளி. மருத்துவமனையில்
# இயங்காத நிலையில் பெண் நோயியல் பிரிவு



**கிளிநொச்சி, ஜூலை 19**

**கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பெண் நோயியல் மருத்துவ நிலையமானது தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

நெதர்லாந்து அரசின் சுமார் 5 ஆயிரத்து 320 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த மே மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

போதிய ஆளணிவளம் இன்மையால் குறிப்பாக கதிரியக்க நிபுணர்கள் இன்மையால் இந்த சிகிச்சை நிலையம் தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது என்று கூறப்படுகிறது. நவீன வசதி கொண்ட இரு சத்திர சிகிச்சை கூடங்களே இயங்காத நிலையில் காணப்படுகின்றன. எனவே ஆளணி வளங்களை நியமிப்பதற்கோ அல்லது ஏற்கனவே மருத்துவமனையில் இருக்கின்ற ஆளணி வளங்களைக் கொண்டோ இந்த சிகிச்சை நிலையத்தை இயங்க வைப்பதற்கு மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-113)




# ஆடிப்பிறப்பும் நினைவரங்கமும்

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்திய ஆடிப்பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நவாலி மகா வித்தியாலயத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் நவாலியூர் சோமசுந்தர புலவரின் திருவுருவச் சிலைக்கும் பாடசாலை நிறுவுநர் பண்டிதர் தம்பையாவின் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர், செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம், 'ஆடிப்பிறப்பும் நவாலியூர் சோமசுந்தரப்புலவரும்' என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ச- 25-27- 66)

# வவுனியாவில் ஆடிப்பிறப்பு விழா



வவுனியா, ஜூலை 19
ஆடிப்பிறப்பு நிகழ்வு வவுனியா, தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவர் சிலையடியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் சோமசுந்தரப்புலவரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள், பொது அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-110)

# யாழ். மாவட்டச் செயலக ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 19
வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகமும் இணைந்து நடத்திய ஆடிப்பிறப்பு விழா, யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத் தலைவர் உ.தர்ஷினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், மாவட்டச் செயலக உத்தியோகத்தர் திருமதி க.லதா ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-66)





தமிழர்களின் பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான ஆடிப்பிறப்பு விழா, மடுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீமுத்து மாரி அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில், மடுப் பிரதேச செயலாளர் கீ.பீட் நிஜாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஆடிப்பிறப்பு பண்டிகையை அறிமுகம் செய்து வைத்த யாழ்.நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. (ப-213,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுத்துறையில் இன்று கடல் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 19

உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகத்தின் 80ஆவது ஆண்டை முன்னிட்டு, பாரதி விளையாட்டுக் கழகத்தால் மாபெரும் விளையாட்டு விழா நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் நீச்சல், தெப்பம் வலித்தல், படகு ஓட்டம் ஆகிய கடல் விளையாட்டுப் போட்டிகள் பாரதி விளையாட்டுக் கழகத் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளன. (ம-66)

**உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2024**

- **இடம்** : கழக மண்டபம் (சிவஞானப் பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய் வீதி, உடுவில்)
- **காலம்** : 04.08.2024 ஞாயிற்றுக்கிழமை
- **நேரம்** : பிற்பகல் 5.30 மணி

மேற்படி கூட்டத்தில் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கா. பாஸ்கரன்
போசகர்
உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம். 077 991 8147

(CS/55698) J-1

## பகிரங்க அறிவித்தல்
## மயான அபிவிருத்தி சபை உருவாக்கல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் எல்லைக்குள் அமைந்துள்ள வட்டாரம் : 17 தெல்லிப்பளை கிராம சேவையாளர் பிரிவு J/228ல் அமைந்துள்ள கொத்தியாலடி இந்து மயானத்திற்கான மயான அபிவிருத்தி சபை உருவாக்கும் பொருட்டான கூட்டம் எதிர்வரும் 2024.07.29ம் திகதி திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு தெல்லிப்பளை நூலகத்தில் நடைபெறவுள்ளதால் பொதுமக்கள் மற்றும் மயானத்துடன் தொடர்புபட்டவர்கள் கலந்துகொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

சு.சுதர்ஜன்,
செயலாளர்,
வலிவடக்கு பிரதேச சபை,காங்கேசன்துறை. 2024.07.19

(CR/42843) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 1962



மறைவு 17 . 07 . 2024

**திருமதி பரிமளா ரவீந்திரன்**

அல்வாய் வடக்கினை பிறப்பிடமாகவும், வதிரியை புகுந்த இடமாகவும், கொழும்பினை வசிப்பிடமாகவும், தற்போது அரியாலை நொத்தாரிஸ் லேனில் வசித்தவருமான பரிமளா ரவீந்திரன் நேற்றுமுன்தினம் (17.07.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசன் - செல்வேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான சீனித்தம்பி - நவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், ரவீந்திரனின் (ஓய்வு நிலை கணக்காளர் - கொழும்பு) அன்பு மனைவியும், கிரிதரன் (ஓய்வு நிலை அதிபர்), சனாதரன் (சுவிஸ்), கோசலா (சுவிஸ்), வினோதரன் (கணக்காளர் - கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், இராஜநாதன், சகுந்தலா - கருணாநிதி, சித்தரஞ்சன், கௌசல்யா - பன்னீர்ச்செல்வன், வேல்நாதன், கீதமணி, ஜெசிந்தாதேவி, சுகிர்தா ஆகியோரின் மைத்துனியும், விஸ்மிதன், அர்ச்சனன் ஆகியோரின் பெரியதாயாரும், அமிர்தவர்ஷன், இராகவர்ஷன், அபிநயா, கவிஷனன், சிவலக்ஷன் ஆகியோரின் மாமியாருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
ரவீந்திரன் - 076 726 4071
கிரிதரன் - 077 894 7603
வினோதரன் - 077 023 7189

நொத்தாரிஸ் லேன்,
அரியாலை.

(CS/55695) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 16.03.1932 — மறைவு 15.07.2024

## சொக்கலிங்கம் பராசக்தி

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியாவை (இலண்டன்) வதிவிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் பராசக்தி கடந்த (15.07.2024) திங்கட்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் பாச மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் (முன்னாள் ஜமுனா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - பண்டாரவளை) அவர்களின் அன்பு மனைவியும், சாந்தாதேவி (U.S.A), ஜெயந்தா (UK), சிவபாலன் (UK), தீபகாந்தன் (UK), காலஞ்சென்றவர்களான சேதுராம் (ஜேர்மனி), புஸ்பராஜா (பிரான்ஸ்), ஜீவகாந்தன் (இந்தியா), ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியநாதன் (U.S.A), ஞானேஸ்வரி (ஜேர்மனி), குமாரகௌரி (பிரான்ஸ்), விஜேந்திரன் (UK), நாகஜோதி (இந்தியா), குணஜா (UK), ஜெயந்தி (UK) ஆகியோரின் பாசமான மாமியும், பிரேமஜா + சுகந்தன், அருள்பிரகாஷ் + கெர்ஸ்ரின், அஷ்வினி, ஹரிபிரசாத், சாரங்கி + விசாகன், சௌமிகாந் + அருணா, சாரங்கன், கௌசிசாத், மிதுஷா, அபிஷாத், இனியன், கஜானி, சாதனா, அனோஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஷிவானி, ஷிவோண், சிவன்யா, லியோ ஆகியோரின் பாசமான பூட்டியும், சகுந்தலாதேவி, காலஞ்சென்றவர்களான மனோன்மணி, நகுலாம்பிகை, பொன்மணி, திருச்செல்வம், தங்கலெட்சுமி, சிந்தாமணி, மங்கயர்க்கரசி, கிருஸ்ணபாலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகாமன், ரூபாவதி, குமாரசாமி, கமலம்மா, காலஞ்சென்றவர்களான சுந்தரம், சண்முகம், சபாரெட்ணம், தம்பையா, சண்முகராஜன், இராசையா, சொர்ணம்மா, கணபதிப்பிள்ளை, கண்ணம்மா, மௌனம்மா ஆகியோரின் அன்பான மைத்துனியும், சத்திமாலா, பஞ்சலிங்கம் வதனி, அகிம்சா செல்வி, நித்திரஞ்சனி, தாசன்தேவி, தயாளன் அமுதா, பரம் சகிலா, அகிலன் தர்சினி, கபிலன் ரஞ்சி, நகுலன் சுமங்கலா, சதீஸ் அனுசலா, கேதீஸ் கவிதா, ராஜன் அமுதா, செல்வன் சித்ரா, ரமேசன் பவா, காலஞ்சென்றவர்களான சிறி, ராகினி, குமரன் ஆகியோரின் அன்பு அன்ரியும், சுகி உத்ஜாயினி, ஆனந்தன் சுகிர்தா, றஜி சாருநிதா, மயூரன் சிவமலர், ரூபன் பாமா, அப்பன் கீதா, ரஞ்சன் ஜாயினி, சாந்தி சிறி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

82/22 செட்டித்தெரு,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/55697) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வு பிற்போடப்பட்டது

யாழ்., ஜூலை 19

யாழ். நகரில், பட்டிமன்றம் புகழ் ராஜா, பாரதி பாஸ்கர் பங்கேற்கும் விவாத நிகழ்ச்சி யாழ். பொது நூலகத்தின் அருகில் உள்ள இந்திய கலாசார மத்திய நிலையத்தில் நாளை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி நேற்று மாலை நடைபெறுவ தாக ஏற்பாடாகியி ருந்த நிலையில், சென்னையிலிருந்து விமானப் பயணம் பிற்போனதால் நிகழ்வும் பிற்போயுள்ளது.

இதேவேளை அரியா லையில் இன்று இரவு நடைபெற ஏற்பாடா கிய நிகழ்ச்சி திட்டமிட்டவாறு நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

# மாணவர்கள் போராட்டம்; பங்களாதேஷில் பதற்றம்



அரசாங்கத்தில் வேலை வாய்ப்பு ஒதுக் கீட்டைக் கண்டித்து, பங்களாதேஷில் மாணவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டம் காரணமாக அங்கு உச்சக் கட்டப் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் அரச வேலை வாய்ப்புத் தொடர் பில், பங்களாதேஷ் அரசாங்கம் அண் மையில் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. இதன்படி, தேசத்தின் சுதந்திரத்துக்காகப் போராடியவர்களின் குடும்பங்களுக்கு 30வீத வேலை வாய்ப்பை ஒதுக்குவது என்று தீர்மானிக் கப்பட்டது. இதற்கு எதிராக மாணவர்க ளும், பட்டதாரிகளும், இளைஞர்களும் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை மேற்கொண்டுள்ளனர். இந்தப் போராட் டங்கள் காரணமாக, பங்களாதேஷ் போர்க் களமாகக் காட்சியளிக்கின்றது என்று சர்வதேச ஊடகங்கள் வலியுறுத் தியுள்ளன.

அரச வேலை வாய்ப்புத் தொடர்பான சட் டவரைவு உடனடியாகத் திரும்பப் பெறப் பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடு பட்ட இளைஞர்கள் வலியுறுத்தி வருகின் றனர். இந்தக் கலவரத்தில் இதுவரை 6 பேர் கொல்லப்பட்டுள்ள நிலையில், பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகள் பலவும், பங்களாதே ஷுக்குச் செல்வது தொடர்பில் தத்தம் மக்களுக்குப் பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. (ம)

# சிவசிதம்பரத்தின் 101ஆவது ஜனனதினம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

'உடுப்பிட்டிச் சிங்கம்' என மக்களால் அழைக்கப்பட்ட நாடாளுமன்ற முன் னாள் உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உப சபாநாயகருமான அம ரர் மு.சிவசிதம்பரத்தின் 101ஆவது பிறந்த தின நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் நெல்லியடி யில் அமைந்துள்ள அவரது உருவச் சிலையடியில் இடம்பெறவுள்ளதாக கர வெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினர் தெரி வித்துள்ளனர். (ம-66)

# யாழ்ப்பாணத்தில் இன்று கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 19

வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசியல்வாதிக ளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்படவுள்ளது.

மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கித், தேர்த லில் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு நாடாளுமன்றம் சென்று அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் உதா சீனம் செய்யும் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கும் வகையில் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே இந்தக் கையெழுத்து வேட்டை நடத்தப்படவுள்ளது.

கிராமிய உழைப்பாளர் சங்கம், தேசிய மீனவர் ஒத்து ழைப்பு இயக்கம் என்பன இணைந்து குறித்த கையெ முத்துப் பெறும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ள தாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-66)

# 75 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 19

அரியாலை சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு பவள விழாவின் ஓரங்கமாக இடம்பெறும் மாபெரும் இலக்கிய விழா, நிலையத்தின் திறந்தவெளி அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கலந்து கொள்வதற்காகப் புகழ்பெற்ற தென் னிந்தியப் பட்டிமன்றப் பேச்சாளர்களான எஸ்.ராஜா, திருமதி பாரதி பாஸ்கர் ஆகிய இருவரும் இன்று வெள் ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர். அவர் கள் இருவரும் பங்கேற்கும் விவாத நிகழ்ச்சி, யாழ்ப்பா ணம் கலாசார மத்திய நிலையத்தில் நாளை சனிக்கி ழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என நிகழ் வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப-66)



எமது நாட்டில் மிக விரைவாக வளர்ச்சியடைந்துவரும்
ஆயுட் காப்புறுதி நிறுவனம்
சணச லே.்.ப் இன்சூரன்ஸ் கம்பனி பி.எல்.சி

## சிறப்பானவர்களைத் தேடுகின்றது

காப்புறுதி துறையில் முன்னணி நிறுவனமான சணச லை.்.ப் இன்ஷ்ரன்ஸ் கம்பனி பி.எல்.சி.,வாடிக்கையாளர் தேவைக்கேற்ப பாதுகாப்பினை வழங்கக்கூடிய பிரபல நிறுவனம் என்பதோடு, இலங்கையின் மிக வெற்றிகரமான மற்றும் ஏற்றுக்கொண்ட "சணச" எனும் சமூக அடிப்படையிலான அமைப்பின் ஆயுட் காப்புறுதி முன்னோடி நிறுவனமாகும்.

புதுமையான காப்புறுதி திட்டங்கள், வாடிக்கையாளர் மைய அணுகுமுறையுடன் தனது வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்ககூடிய உறுதியான அர்ப்பணிப்புடன் செயல்படும் ஒரு நிறுவனம் என்பதுடன் ,அதன் வர்த்தக நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்காக, நாடளாவிய ரீதியில் உள்ள கிளைகளில் காணப்படும் பின்வரும் வெற்றிடங்களுக்கு முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### கிளை முகாமையாளர்

**தொழில் சார் பொறுப்புகள்**

- கிளைக்காரியாலயத்திற்காக ஒதுக்கப்பட்ட விற்பனை இலக்குகளை அடைதல் மற்றும் கிளை ஊழியர்களை நிர்வகித்தல்.
- கிளையின் பணியாளர் தேவைகளின் அடிப்படையில் விற்பனை மற்றும் விற்பனை அல்லாத ஊழியர்களை பணியமர்த்துதல் மற்றும் தேவையான பயிற்சிகளை வழங்கல் .
- விற்பனை ஊக்குவிப்பு திட்டங்களை ஒழுங்கமைப்பதன் மூலம் காப்பீட்டுத் திட்டங்களை சந்தைப்படுத்துதல் மற்றும் விளம்பரப்படுத்துதல்.
- வாடிக்கையாளர்களுடன் நல்உறவுகளை பேணுதல்.
- சந்தை பகுப்பாய்வு மூலம் புதிய வணிக வாய்ப்புகளை கண்டறிதல்.
- விற்பனை அதிகாரிகளின் செயல்திறனை மதிப்பாய்வு செய்வதன் மூலம் அவர்களை மேம்படுத்தல்.

**அடிப்படை தகுதிகள்**

- க.பொ.த. உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- SLIM/CIM அல்லது சந்தைப்படுத்தல் துறையில் டிப்ளமோ படிப்பினை மேற்கொண்டிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- காப்புறுதி துறையில் சம பதவியில் மூன்று வருட கால அனுபவம் காணப்படல் வேண்டும்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் காணப்படல் வேண்டும்.

### உதவி கிளை முகாமையாளர்

**தொழில் சார் பொறுப்புகள்**

- தனிநபர் அல்லது குழு இலக்குகளை அடைதல் மற்றும் பணியாளர்களை நிர்வகித்தல்
- விற்பனை ஊழியர்களை இணைத்தல் மற்றும் பயிற்சி வழங்கல்.
- வாடிக்கையாளர்களுடன் நல் உறவுகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- சந்தை பகுப்பாய்வு மூலம் புதிய வணிக வாய்ப்புகளை கண்டறிதல்.

**அடிப்படை தகுதிகள்**

- க.பொ.த. உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- சந்தைப்படுத்தல் துறையில் டிப்ளமோ படிப்பினை மேற்கொண்டிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- காப்புறுதி துறையில் சம பதவியில் மூன்று வருட கால அனுபவம் காணப்படல் வேண்டும்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் காணப்படல் வேண்டும்.

### சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி

**தொழில் சார் பொறுப்புகள்**

- சந்தைப்படுத்தல் நிறைவேற்று பதவிக்குரிய வியாபார இலக்கினை அடைதல்.
- வாடிக்கையாளருடன் நல்உறவுகளை பேணுதல்.
- சந்தை பகுப்பாய்வு மூலம் புதிய வணிக வாய்ப்புகளை கண்டறிதல்.

**அடிப்படை தகுதிகள்**

- க.பொ.த. உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- இதே பதவியில் குறைந்தபட்சம் 01 வருட சேவை அனுபவம் (அனுபவம் இல்லாத விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்கலாம்)
- விற்பனை அல்லது காப்பீட்டில் சான்றிதழ் படிப்பு கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் காணப்படல் வேண்டும்.

### வலய முகாமையாளர் - வடக்கு மற்றும் கிழக்கு

**தொழில் சார் பொறுப்புகள்**

- விற்பனை இலக்குகளை அடைவதற்கும், வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்திற்கான சந்தைப் பங்கினை மேம்படுத்துவதற்கும் உரிய மூலோபாயத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தல்.
- செயல்திறன் மற்றும் இலக்குகளை மீற விற்பனை வல்லுநர்களின் குழுவை வழிநடத்தவும், ஊக்குவிக்கவும் மற்றும் நிர்வகிக்கவும்.
- காப்பீட்டுத் துறையில் தரகர்கள், முகவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் வலுவான உறவுகளை மேற்கொள்ளல் மற்றும் பராமரித்தல்.
- சந்தைப் போக்குகள், போட்டியாளர் செயல்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் கருத்துகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் வளர்ச்சி மற்றும் புதுமைக்கான வாய்ப்புகளை அடையாளம் காணல்.
- ஒதுக்கப்பட்ட வலயமானது நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்க செயற்படுவதை உறுதிசெய்தல்.
- விற்பனை செயல்திறன், சந்தை இயக்கவியல் மற்றும் முக்கிய முயற்சிகள் குறித்து உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு முறையான அறிக்கைகள் மற்றும் புதுப்பிப்புகளை வழங்கல்.

**தகைமைகள்**

- வணிக நிர்வாகம், சந்தைப்படுத்தல் அல்லது தொடர்புடைய துறையில் இளங்கலை பட்டம்.(முதுகலைப் பட்டம் விரும்பத்தக்கது.)
- காப்பீட்டு விற்பனை துறையில் குறைந்தபட்சம் 10 வருடகால அனுபவம் மற்றும் நிர்வாக அல்லது தலைமைப் பொறுப்பில் 5 ஆண்டுகள் குறைந்தபட்ச அனுபவம்.
- விற்பனை இலக்குகளை அடைவது அல்லது மீறுவது மற்றும் வணிக வளர்ச்சியை உந்துதல் ஆகியவற்றில் நிஷரூபிக்கப்பட்ட பதிவு.
- சிறந்த தலைமைத்துவம், தொடர்பாடல் மற்றும் தனிநபர் திறன்கள்.
- வலுவான பகுப்பாய்வு திறன்கள் மற்றும் மூலோபாய சிந்தனை திறன்கள்.
- வேகமான மற்றும் போட்டி நிறைந்த சூழலில் செயலாற்றும் திறன்.
- காப்பீட்டுத் துறை மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் பற்றிய அறிவு.
- ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சரளமாக பேசுதல்.

### பிராந்திய முகாமையாளர் - வடக்கு மற்றும் கிழக்கு

**தொழில்சார் பொறுப்புகள்**

- வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்திற்கான விற்பனை இலக்குகள் மற்றும் வணிக நோக்கங்களை அடைவதற்கான மூலோபாய திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.
- விதிவிலக்கான செயல்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கான விற்பனை பிரதிநிதிகளின் குழுவை வழிநடத்தல்ஊக்குவித்தல் மற்றும் வழிகாட்டல்.
- வணிக வாய்ப்புகள் மற்றும் நிறுவன நாமத்தின் இருப்பை மேம்படுத்த வாடிக்கையாளர்கள், தரகர்கள் மற்றும் பிற முக்கிய பங்குதாரர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்கி கொள்ளலும் பேணுதலும் .
- சந்தைப் போக்குகள், போட்டியாளர்களின் செயல்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறை மாற்றங்கள் ஆகியவற்றைக் கண்காணித்து வாய்ப்புகளைக் கண்டறிந்து அபாயங்களைக் குறைத்தல்.
- நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்தல்.
- தயாரிப்பு மேம்பாடு, சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டிற்கான முன்முயற்சிகளை இயக்க குறுக்கு-செயல்பாட்டு குழுக்களுடன் இணைத்தல்.
- செயல்திறனை மதிப்பிடுவதற்கும், தரவு சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கும் உரிய அறிக்கைகள், விளக்கக்காட்சிகள் மற்றும் பகுப்பாய்வுகளைத் தயாரித்தல்.

**தகைமைகளும் அனுபவங்களும்**

- வணிக நிர்வாகம், சந்தைப்படுத்தல் அல்லது தொடர்புடைய துறையில் இளங்கலை பட்டம். (காப்பீட்டு நிர்வாகத்தில் எம்பிஏ அல்லது தொழில்முறை தகுதிகள் கூடுதல் நன்மையாக எடுத்துக்கொள்ளப்படும்.)
- இலக்குகளை அடைதல் மற்றும் வணிக வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றில் நிஷரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் காப்பீட்டு விற்பனை, சந்தைப்படுத்தல் அல்லது நிர்வாக பதவி நிலைகளில் குறைந்தபட்சம் 5 வருட கால அனுபவம்.
- வலுவான தலைமைத்துவம், தொடர்பாடல் திறன் மற்றும் தனிப்பட்ட திறன்கள்.
- சிறந்த பகுப்பாய்வு மற்றும் சிக்கல்களை கையாளும் திறன்கள்.
- காப்பீட்டுத் தயாரிப்புகள், தொழில்துறை போக்குகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் பற்றிய கூடுதல் அறிவு.
- வேகமான மற்றும் போட்டி நிறைந்த சூழலில் செயலாற்றும் திறன்.

மேற்கண்ட வெற்றிடங்களுக்கு தகுதியுடையவர் என நீங்கள் கருதின், கவர்ச்சிகரமான சம்பளம், ஊக்கத்தொகை மற்றும் பல சலுகைகளுடன் வேலை வாய்ப்பை வழங்க நாமும் தயாராக உள்ளோம்.

இவ் விளம்பரம் வெளியான 07 நாட்களுக்குள் careers@sicl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிவர விண்ணப்பத்தை அல்லது தபால் மூலம் அனுப்புவதாயின் கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்- மனிதவளம் மற்றும் நிறுவுதல் பிரிவு
சணச லே.்.ப் இன்சூரன்ஸ் கம்பனி பி.எல்.சி
இல 340 2/1, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை,
கொழும்பு 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி

# இறப்புக்கான காரணங்களுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும்

## நீதிமன்று பணிப்பு என்கிறார் சட்டத்தரணி

**முல்லைத்தீவு, ஜுலை 19**

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடிப்படையாக வைத்து அவர்களின் இறப்புக்கான காரணம், பால், வயது உள்ளிட்ட பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கி இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் பணித்துள்ளதாக சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் தெரிவித்தார்.**

புதைகுழி அகழ்வின் இறுதியில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது. மாவட்ட நீதிவான் த.பிரதீபன் முன்னிலையில் அவரின் பிரசன்னத்துடன் அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித ஓட்டுத்தொகுதிகள் அதனூடான பிற சான்றுப்பொருள்கள் பாரப்படுத்தப்பட்டன. இடைக்கால அறிக்கை பேராசிரியர் றாஜ்சோமதேவவால் தாக்கல் செய்யப்பட்டது. அதில் 1994- 1996 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய எச்சங்களாக இவை இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பங்குபற்றுனர்களின் இறுதி அறிக்கைகளும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும். இறப்புக்கான காரணம், பால், வயது, உயரம் உட்பட பல விடயங்கள் உள்ளடக்கப்படவேண்டும்.


அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக அதிகாரிகளின் அறிக்கையும் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவேண்டும். இதுபோன்ற அறிக்கைகள் எல்லாம் கிடைக்கப்பெற்ற பின்னர் ஒட்டுமொத்த அறிக்கைகளை வைத்து தீர்மானத்துக்கு வரமுடியும் என்று நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 8ஆம் திகதி மீண்டும் அழைக்கப்பட இருக்கின்றது.

காணாமற் போனோர் அலுவலகத்தின் பிரதிநிதிகளின் பிரசன்னத்தில் புதைகுழி முற்றுமுழுதாக மூடப்பட்டுள்ளது. சர்வதேச நியமங்களுக்கு அமைவாக புதைகுழியை மூடுமாறு நீதிமன்றின் கவனத்துக்கு நாங்கள் கொண்டுசென்றோம்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள், தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களின் உடலங்களாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. கூடுதலாக பெண் போராளிகளின் உடலங்கள்தான் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதிகமானவர்களின் உடலங்களில் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. குழிகளுக்குள்ளும் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்துள்ளன. அதனைவிட பிற பொருள்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

ஆடைகள் கிழிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளதை காணக்கூடியதாக இருந்தது. இங்கு ஒரு வன்முறை, துஷ்பிரயோகம், மனித
உரிமைமீறல்நடந்ததுஎன்று அப்பட்டமாக தெரிகின்றது. ஒட்டுமொத்த அறிக்கைகள் வந்ததன் பின்னர்தான் உண்மை துலங்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தொழில்நுட்பவசதிகள், சர்வதேச முறைகள் இலங்கையில் இல்லை என்பதை நாங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும்,
- என்றார். (ஒ-19)



பாழடைந்த நிலையில்

# வன்னேரிக்குளம் சுற்றுலா மையம்

கிளிநொச்சி, ஜுலை 19

கிளிநொச்சி - வன்னேரிக்குளத்தில் சுமார் 6 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2017 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையமானது எந்தவித பயன்பாடுகளும் இல்லாது பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது என்று பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் சுற்றுலாப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டு குறித்த பகுதியில் சுற்றுலா விடுதி ஒன்று அப்போதைய வடக்கு மாகாண சபையால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

இவ்வாறு திறந்துவைக்கப்பட்ட சுற்றுலா மையமானது இன்று வரை எந்த பயன்பாடுகளும் இன்றி பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் முன்வந்து பாழடைந்த நிலையில் காணப்படுகின்ற சுற்றுலா மையத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)

# நிதி முகாமை விழிப்புணர்வு மாணவர்களிடையே போட்டி

கொழும்பு, ஜுலை 19

நிதி முகாமைத்துவச் சட்டவரைவுகள் மற்றும் பொருளாதார மாற்ற சட்டவரைவுகள் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் பத்திரிகை கட்டுரைப் போட்டியொன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

'முறையான அரச நிதி முகாமைத்துவம் மற்றும் நிலையான பொருளாதார மாற்றத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டளவில் வளர்ச்சியடைந்த எனது நாடு' என்ற கருப்பொருளின் கீழ் தேசிய ரீதியில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் பாடசாலைகள் என்பவற்றுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசுகள், சான்றிதழ்களை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் அரசாங்கத் தகவல் திணைக்களம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி ஜுலை 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவம், ஆக்கங்களை அனுப்ப வேண்டிய விதம் தொடர்பான மேலதிக தகவல்களை அரசாங்கத் தகவல் திணைக்க ளத்தின் https://www. dgi.gov. lk/contactus/public financemanagement bill இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# 'தைக்வெண்டோ' போட்டி உடையார்கட்டு ம.வி. வெற்றி

முல்லைத்தீவு , ஜுலை 19

வடமாகாண கல்வித்திணைக்களத்தால் முல்லைத்தீவு கல்வி வலயம் , முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை என்பவற்றின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மாகாண மட்ட 'தைக்வெண்டோ' போட்டியில் முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயத்தை சேர்ந்த 8 மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு உள்ளக அரங்கில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில் நான்கு மாணவர்கள்முதலாம் இடத்தையும் , இரு மாணவர்கள் 2ஆம் இடத்தையும் , இரண்டு மாணவர்கள் 3ஆம் இடங்களையும் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (ச-22-13)



சாவகச்சேரி தொகுதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் வ.ந. நவரத்தினத்தின் 95 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தென்மராட்சியிலுள்ள 5 முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் நிலைமைகள் நேரில் பார்வையிட்ட சஜித்

முல்லைத்தீவு, ஜுலை 19

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கொக்கிளாய்ப் பகுதியில் வசித்துவரும் மக்களின் நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டுக் கேட்டறிந்து கொண்டார்.



முல்லைத்தீவு - கொக்கிளாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கான ஸ்மார்ட் வகுப்பறையைத் திறந்து வைத்த பின்னர் கொக்கிளாய் முகத்துவாரம் பகுதிக்குச் சென்றார். அங்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எல்லைப்பகுதியாகக் காணப்படும் கொக்கிளாய் புல்மோட்டை கடல் இணைப்பையும் பார்வையிட்டுள்ளார்.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் கொக்கிளாய் பாலம் இல்லாத நிலையில் மக்களின் கடல் போக்குவரத்தின் சிரமங்கள் குறித்தும் கேட்டறிந்தார். (ச-19)



யாழ். சண்டிலிப்பாய் ஆலங்குளாய் கலைவாணி முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை நிகழ்வு, முன்பள்ளி முன்றலில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. (ப-63)



# மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 19

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை அதிபர் தி.மோகனபாலனின் மணிவிழா நிகழ்வு, வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-125)



கரைச்சிக் கோட்ட விளையாட்டு விழாவில் அனைத்துப் பிரிவிலும் கிளிநொச்சி, புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவிகள் முதலாம் இடங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். (ப-13)



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் தரம் -1 இல் இருந்து க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்று பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்தி செய்து கண்டாவளை பிரதேச செயலக மாவட்டப் பதிவாளராகப் பணியாற்றிய திருமதி சிந்துஜா சசிகுமார், அண்மையில் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவாகியிருந்தார். அவரை முருகானந்தா கல்லூரிச் சமூகத்தினர் நேற்றுமுன்தினம் பாராட்டிக் கௌரவித்தனர். (ப-13)

# தேர்தலை பிற்போடும் அவசியம் கிடையாது

## சந்திரசேன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது. பொருளாதாரமும் சிறந்த நிலைக்குத் திரும்புகின்றது. எனவே, ஜனாதிபதித் தேர்தலை பிற்போட வேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் அரசுக்கு கிடையாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. ஜனாதிபதி தலைமையிலான அரசும் அதேநிலைப்பாட்டில்தான் உள்ளது. தற்போது தேர்தலுக்கு சாதகமான சூழல் நிலவுகின்றது. அநுராதபுரம் மாவட்டத்தில் எமது வெற்றி உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுனஇன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. நானும் அரசியல் குழுவில் இருக்கின்றேன். மஹிந்த ராஜபக்ச தலைமையில் அந்த குழு கூடியே முடிவெடுக்கும். வெகுவிரைவில் அந்த முடிவு எடுக்கப்படும். அதேபோல பொதுஜன பெரமுனக் கட்சிக்குள் பிளவு ஏற்படக்கூடாது. இணைந்து பயணித்தால் அனைவருக்கும் நல்லது- என்றார். (ஒ-44)

# பிள்ளையாரின் மாம்பழம் ரூ.6 இலட்சத்துக்கு ஏலம்

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி.பளை- கச்சார்வெளி தான்தோன்றிப் பிள்ளையார் கோவில் பூசைக்கு வைக்கப்பட்ட மாம்பழங்கள் 6 இலட்சம் ரூபாவுக்கு ஏலம்போயுள்ளன.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழாக்கள் நடைபெற்று வரும் நிலையில் 5ஆம் திருவிழாவான மாம்பழத்திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போதுவிநாயகப் பெருமானின் பூசைக்கு வைக்கப்பட்ட மாம்பழங்கள் இரண்டு ஏலத்தில் விடப்பட்டன. கச்சார் வெளியினைச் சேர்ந்த அரியகுட்டி வள்ளிப்பிள்ளை பூலோகம் குடும்பத்தினர் அதனை ஆறு இலட்சம் ரூபாவுக்குப் பெற்றனர். (ம-25-19)

# அம்புலன்ஸ் படகில் சிசுவொன்று பிரசவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

நெடுந்தீவில் இருந்து நேற்றுமுன்தினம் மதியம் பிரசவத்துக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட தாய், அம்புலன்ஸ் படகில் சிசுவைப் பிரசவித்துள்ளார்.

பிரசவத்துக்காக அனுப்பப்பட்ட தாயுடன் நெடுந்தீவு மருத்துவ அதிகாரி, வெளிக்கள மருத்துவ மாது, மருத்துவசாலை ஊழியர்கள் படகில் சென்றிருந்த நிலையில், அம்புலன்ஸ் படகில் வெளிக்கள மருத்துவ மாதுவின் உதவியுடன் சுகப்பிரசவம் நடந்துள்ளது.

தாயும், சேயும் நலமுடன் தற்போது அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பராமரிப்பில் உள்ளனர் எனவும் நெடுந்தீவு மருத்துவஅதிகாரிதெரிவித்துள்ளார். (ம)



# ஆடிப்பிறப்புப் பெருவிழா!

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் கோப்பாய்ப் பிரதேச செயலகமும் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த ஆடிப்பிறப்புப் பெருவிழா, கோப்பாய்ப் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில், கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் புதிய மாநாட்டு மண்டபத்தில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ச-22-66)



முல்லைத்தீவு, பாலிநகர் மகா வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைப் பிற்போட முனைந்தால் நாட்டில் அராஜக நிலைமை

## எச்சரிக்கிறார் மைத்திரி

ஜனாதிபதித் தேர்தலை ஏதேனும் வழியில் பிற்போட முற்பட்டால் நாட்டில் அராஜக நிலைமை ஏற்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும். அதனை ஒத்திவைக்கமுடியாது - இவ்வாறு ஒத்திவைக்க முற்பட்டால் நாட்டில் அராஜக நிலை தோற்றம்பெறும். தற்போதைய சூழ்நிலையில் அரசமைப்பு மறுசீரமைப்புநடவடிக்கையை முன்னெடுக்க முடியாது. தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். சுதந்திரக்கட்சி வேட்பாளர் ஒருவர் வருவார். சுதந்திரக் கட்சியை கொள்ளையடிப்பதற்காக அரச அதிகாரம் பயன்படுத்தப்படுகின்றது. இது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. கட்சியை நாம் பாதுகாப்போம் - என்றார் மைத்திரி. (ஒ-44)

### ஞானசாரருக்கு...

முறையீட்டு நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவித்த குற்றத்துக்காக அவருக்கு 4 ஆண்டுகள் கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த பிணைக் கோரிக்கை மனுவை ஆராய்ந்த நீதிமன்றம், அவரைப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

அண்மைக்காலமாக ஞானசார தேரரைப் பொதுமன்னிப்பில் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை பௌத்த கடும்போக்குவாதிகளிடம் இருந்து எழுந்திருந்தது. சிறிலங்காவின் சிங்கள - பௌத்த தேசியத்துக்காக ஞானசார தேரர் கடந்த காலங்களில் குரல் எழுப்பினார் என்றும், அவரைப் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யவேண்டும் எனவும் பிரதான பௌத்த மதகுருக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, ஞானசார தேரருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### குதிரையில்...

தெடுக்கக் கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுக்கூட்டணியின் பெயர், சின்னம் என்பன பற்றிய இறுதிக் கட்ட கலந்துரையாடல் தற்போது இடம்பெற்றுவருகின்றது. யானை, அன்னம் மற்றும் மொட்டு என்பன பொதுச்சின்னமாக இருக்கக்கூடாது என பெரும்பாலானவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இதனால் பொதுச்சின்னமாக குதிரைச் சின்னத்தை தேர்ந்தெடுப்பது பற்றி ஜனாதிபதி ஆராய்ந்துவருகின்றார். கப்பல் சின்னத்தை ஏற்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (அ-ம-44)

### சஜித்துடன்...

முடியாது. என்னை நீக்கக்கூடாது என நீதிமன்றத் தீர்ப்பு உள்ளது. எனவே, கட்சியின் தவிசாளர் பதவிக்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டால் அது நீதிமன்றத்தை அவமதிக்கும் விடயமாகவே அமையும்.

சஜித் அவரின் தந்தையை வைத்து அரசியல் நடத்துகின்றார். இப்படியான அணுகுமுறை சரியில்லை என அவரிடம் நேரில் குறிப்பிட்டுள்ளேன். சஜித் பிரேமதாஸவுடன் இனி அரசியல் செய்யப்போவதில்லை. தனிப்பட்ட ரீதியில் அவருக்கும் எனக்கும் இடையில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. ஆனால், அவரின் அரசியல் பயணத்தை என்னால் அனுமதிக்க முடியவில்லை" - என்றார். (அ-ம-44)

### மக்களுக்காகவே...

கனத்த மனதுடன் மண்ணிலிருந்து விடைபெறுகின்றேன். நாளையதினம் (இன்று) கொழும்பு சென்று புதிய நியமனத்தைப் பெற்றுக்கொண்டு முன்னர் கடமையாற்றிய பேராதனை மருத்துவமனையில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளேன்.

எனினும், எனது குரல்வளையை நசுக்கி, அச்சுறுத்தி எவராலும் என்னை அடிபணிய வைக்கமுடியாது. மக்களுக்கான எனது பணி எப்போதும் தொடரும். சுகாதார அமைச்சர் தலைமையிலான குழுவின் யாழ்ப்பாணத்துக்கான பயணம் என்பது ஒரு நிகழ்ச்சி நிரலுடன் கூடிய கண்துடைப்பு என்பது மட்டுமல்லாமல் ஏமாற்று வித்தையாகும் - என்றார். (அ-ம-20-26)

### பெரமுன...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பெரமுனவின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி முற்பட்டு வருகின்றார். அதற்காக அந்தக் கட்சியைத் திருப்திபடுத்துவதற்காக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பஸில் ராஜபக்சவுக்கு பிரதமர் பதவியைத் தருகின்றேன், எனக்கு ஆதரவு தாருங்கள் என்பது தான் புதிய முன்மொழிவாக உள்ளது.

பஸில் ராஜபக்ச மக்களால் விரட்டப்பட்டவர், எனினும் பெரமுனவுக்குள் அவருக்கே செல்வாக்கு உள்ளது. மஹிந்த ராஜபக்ச செல்லாக்காசாகி வருகின்றார். இது ரணிலுக்கும் தெரியும், அதனால் தான் பஸில் ராஜபக்சவை குறிவைத்துள்ளார்.

முதலில் பிரதமர் பதவியைத் தருகின்றேன், எனக்குப் பின்னர் நீங்கள் ஜனாதிபதியாக வரலாம், ஆதரவு தாருங்கள் என்பதே ரணிலின் கோரிக்கை. எனினும் ரணிலால் வெற்றிபெற முடியாது...

ஏனெனில் அவரின் ஜாதக கட்டமைப்பு அவ்வாறுதான் உள்ளது. தேர்தலைப் பிற்போடும் ஜனாதிபதியின் எந்த முயற்சியும் எடுபடாது. அதற்கு நாடாளுமன்றத்தின் ஆதரவும் கிட்டாது" - என்றார். (அ-ம-44)

### ஜனாதிபதித்...

பெறலாம் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடக்கும். அதற்கு எவ்விதத் தடையும் இல்லை. யாரும் நிறுத்தப் போவதும் இல்லை. வெகுவிரைவில் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும். அரசமைப்பு மறுசீரமைப்பு (22ஆவது திருத்தம்) பணியும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தடையாக அமையாது.

சிலவேளை தேர்தலுக்குப் பிறகே மறுசீரமைப்பு இடம்பெறலாம். சிறிய வழுவொன்று சரிசெய்யப்படுகின்றது. மாறாக தேர்தலை பிற்போடும் எந்த நோக்கமும் அதில் இல்லை. தேர்தலை பிற்போட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையும் கிட்டாது. நாம் இடமளிக்கப்போவதும் இல்லை" - என்றார்.

இதேவேளை - 22 ஆவது திருத்தச்சட்டத்தை அடுத்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆளுங்கட்சி முயற்சிக்கின்றது என்று எதிரணி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### முட்கிளுவை...

என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார். இந்த மாதத்தின் ஆரம்பத்தில் விறகு பொறுக்குவதற்காகச் சென்ற போது அவருக்கு காலில் முட்கிளுவை குத்தியுள்ளது.

இதையடுத்து ஏற்பட்ட கால்வலி காரணமாக, அவர் மூளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, முட்கிளுவை குத்திய இடத்தில் ஏற்பட்ட கிருமித்தொற்றும் அதன் பரவலுமே மூதாட்டி உயிரிழந்தமைக்குப் பிரதான காரணம் என்று தெரியவந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### விஷஜந்துக்...

இது தொடர்பில் சாவகச்சேரி மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

மருத்துவமனையில் மருத்துவர்கள் இருக்கவில்லை என்பது தொடர்பாக கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தவறுகள் சரிசெய்யப்படும் - என்றார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச்செல்லும்போது மருத்துவர்கள் நிற்பதில்லை என்றும், இதனால் பொது மக்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்படுகின்றனர் எனவும் சாவகச்சேரி மருத்துவமனையின் முன்னாள் பதில் பணிப்பாளர் மருத்துவர் அர்ச்சுனா குற்றஞ்சாட்டியிருந்தது டன், சில நிர்வாகச் சீர்திருத் தங்களையும் முன்னெடுத்திருந்தார். அவருக்கு மக்களிடம் இருந்து பேராதரவு வழங்கப்பட்டது. எனினும், பின்னர் இடம்பெற்ற நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக, அர்ச்சுனா இடமாற்றம் செய்யப்பட்டதுடன், புதிய பதில் அத்தியட்சகராக மருத்துவர் ரஜீவ் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-27-20-26)

### தேர்தல்...

ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.

நீதி அமைச்சின் செயலாளருக்கே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கிலேயே 22 ஆவது திருத்தச்சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது என எதிரணிகளும், சிவில் அமைப்புகளும் சுட்டிக்காட்டி வருகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நீதி அமைச்சர் இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார். (அ-ம-44)

### கடத்தப்பட்டார்...

இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். விகாரையில் இருந்த புத்தர் சிலையைத் திருடிக்கொண்டு, படகில் ஏறி குறிகாட்டு வான் பகுதிக்கு வந்த நிலையில் புத்தர்சிலையுடன் அந்த இளைஞர் கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்ட நிலையில், பொலிஸ் விசாரணையின்போது அந்த இளைஞர் மன நிலை பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-20)

### 350...

நாடு முழுவதும் 5 ஆயிரம் கிராமங்களை, அபிவிருத்தி செய்யும் சனச தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் யாழ். மாவட்டத்துக்கான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்றது. இதன்போதே, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 350 கிராமங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், சனச சங்கத்தின் தலைவர், பிரதேச செயலாளர்கள்உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். குறித்த வேலைத் திட்டத்தின் ஊடாகப் புதிய வேலைவாய்ப்புகள் பலவற்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சிபானியின் மறைவிடம்; கண்டுபிடித்துவிட்டோம்

## பெருமிதம்கொள்கிறார் டிரான் அலஸ்

கொழும்பு, ஜூலை 19

நிழல் உலக தாதா கஞ்சிபானி இம்ரான் எங்கு தலைமறைவாகியுள்ளார் என்பது தொடர்பான உளவுத் தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. அவற்றை வெளிப்படுத்தமுடியாது. பாதாளக் குழுக்கள் நிச்சயம் ஒடுக்கப்படும். எத்தடை வரினும் யுக்திய நடவடிக்கை தொடரும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்துருகிரிய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் இன்னும் இருவரைத்தான் கைதுசெய்யவேண்டியுள்ளது. ஏனைய அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். எம்பிலிப்பிட்டிய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் மற்றும் அம்பலாங்கொடை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்கள் தொடர்பில் தகவல்களை வழங்குமாறு மக்களிடம் கோரி இருந்தோம். எனினும், தகவல்கள் கிடைப்பது குறைவு. தமது பிள்ளைகளிடம் சட்டவிரோத ஆயுதம் இருந்தால் கூட அறிவியுங்கள். அது உங்கள் பிள்ளைகள் குற்றவாளியாவதைத் தடுக்கும்.

நாட்டில் குற்றமிழைத்துவிட்டு வெளிநாட்டுக்குத் தப்பியோடி இருந்தாலும் குற்றவாளிகளைக் கொண்டுவருவோம். அதற்குரிய நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றது.

யுக்திய நடவடிக்கை ஆரம்பமானபோது ஜூன் மாதத்துக்குள் மாற்றம் வரும் எனக் கூறினேன். அந்த மாற்றம் வந்துள்ளது. டிசெம்பர் வரை முன்னெடுக்கப் படவேண்டிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதேபோல யுக்திய நடவடிக்கைக்கு எதிராக பல தடைகள் உள்ளன, சட்ட ரீதியாகவும் தடைகள் வருகின்றன. எத்தடை வரினும் யுக்திய நடவடிக்கை தொடரும்.

மாகந்துரே மதுஷின் பணம் கிளப் வசந்தவிடம் இருந்தது என்பது தொடர்பான தகவல்கள் இன்னும் விசாரணைகளில் தெரியவரவில்லை.

கஞ்சிபானி இம்ரான் எங்கு உள்ளார் எனப் புலனாய்வுத் தகவல்கள் உள்ளன. அவற்றை வெளிப்படுத்த முடியாது. ஆனால் சில சட்டத்தரணிகளால்தான் அவர்கள் தப்பிச்சென்றனர். குற்றச்செயல்களு டன் எந்தவொரு அரசியல்வாதி தொடர்புபட்டிருந்தாலும் உரிய ஆதாரங்கள் இருப்பின் நிச்சயம் கைது செய்யப்படுவார்கள் - என்றார். (ஒ-44)

# ஓமனில் கவிழ்ந்த கப்பல் இலங்கையரும்மீட்பு

மஸ்கட், ஜூலை 19

**ஓமன் கடலில் கவிழ்ந்த எண்ணெய்க் கப்பலிலிருந்து ஒன்பது பேரை இந்திய கடற்படை மீட்டுள்ளது.**



அவர்களில் 8 இந்தியர்களும், இலங்கையை சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர். கடந்த திங்கட்கிழமை ஓமனின் டுக்ம் துறைமுகத்துக்கு அருகே கப்பல் கவிழ்ந்தது. இந்தக் கப்பலில் இலங்கையை சேர்ந்த 3 பேர் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த 13 பேர் பணியில் இருந்தனர்.

மாயமான பணியாளர்களைத் தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. இதனை ஓமன் கடல் பாதுகாப்பு மையம் தெரிவித்தது.

இந்தப் பணியில் இந்திய கடற்படையின் போர்க் கப்பலான ஐ.என்.எஸ் டெக் மற்றும் கடல்சார் கண்காணிப்பு விமானமான பி-8 ஆகியன இணைந்தன. கடந்த செவ்வாய்க்கிழமை கவிழ்ந்த கப்பல் அடையாளம் காணப்பட்டது. அதைத்தொடர்ந்து துரிதமாக மீட்புப் பணி மேற்கொள்ள ப்பட்டது. இதுவரை 9 பேர் மீட்கப்பட்டுள்ள துடன் எஞ்சியோரைத் தேடும் பணி துரிதமாக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## பெருந்திருவிழா

*யாழ்ப்பாணம், ஜூலை 19*


*யாழ்ப்பாணம், இணுவில் ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ச-66)*

## முத்துராஜா முன்னேற்றம்

கொழும்பு, ஜூலை 19

இலங்கையில் இருந்து தாய்லாந்துக்கு திருப்பி அனுப்பப்பட்ட முத்துராஜா யானையின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தாய்லாந்து தூதுவர் தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு முத்துராஜா யானை அளுத்கம கந்த விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்காக தாய்லாந்து நாட்டினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



அங்கு உடலியல் ரீதியில் பாதிக்கப்பட்ட முத்துராஜா யானை தொடர்பில் இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தாய்லாந்து முத்துராஜா யானையை மீண்டும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)


## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

(S/55548) J-1

## பண்ணை வேலைக்கு ஆள் தேவை

1. உணவு இலவசம்
2. EPF & ETF முழுவதும் எம்மால் கட்டப்படும்
3. மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்
4. மது அருந்துதல் மற்றும் ஸ்மாட் போன் பாவிக்க முடியாது.
5. சம்பளம் சுமார் 55000/=, (வீடு கொண்டு செல்லலாம்)

தொடர்பு: 076 778 8493 / 077 966 9498 / 076 760 0403




## முன்னோடி நிகழ்ச்சித் திட்டம்!

முல்லைத்தீவு , ஜூலை 19

நாடளாவிய ரீதியில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் 'சாரதியின் இரு கரங்கள் மூலம் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பிரதம அதிதியாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.எஸ்.குணபாலன் கலந்துகொண்டார். மேலும் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர்,கல்வித் திணைக்கள அதிகாரிகள், போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி, சிறுவர் சார் உத்தியோகத்தர்கள்,பாடசாலை போக்குவரத்து சேவையிலுள்ள சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச -22,13)

## தப்பிய குற்றவாளிகள்; பிடிக்க புதிய படையணி

*கொழும்பு, ஜூலை 19*

*மத்திய கிழக்குக்குத் தப்பிச்சென்றுள்ள, குற்றச்செயல் களுடன் சம்பந்தப்பட்டோரை மீண்டும் அழைத்து வருவதற்கு இரு தரப்பும் இணைந்த விசேட படையணியொன்றை உருவாக்கவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.*

*இதற்கு அனுசரணை வழங்குமாறு ஐ.நா.விடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-6)*


## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whats: app 077 756 3781

jenyjude77@yahoo.com

(CS/55682) J-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org